RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சீறாப்புராணத்தில் இஸ்லாமிய வரலாற்றுப் போர்கள்

**அ. முகம்மது அசாருதீன்** [அ, *]

[அ] தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620024, தமிழ்நாடு, இந்தியா

# Islamic Historical Battles in the Seera Puranam

**A. Mohamed Asarudeen** [a, *]

[a] Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620024, Tamil Nadu, India.

* Corresponding Author: asar.ame13@gmail.com

Received: 30-07-2025
Revised: 11-09-2025
Accepted: 24-09-2025
Published: 02-10-2025

**ABSTRACT**

Islam is the belief that God is one, that God has no form, that we should believe in God, that all human beings are equal in God's creation, and that it is wrong to discriminate between people based on money, color, or language. In addition, it is also the belief that people should behave honestly, avoiding enslaving others, drinking, gambling, committing adultery, lying, stealing, profiteering from plunder, hoarding goods, cheating in terms of money or quantity, and taking interest. "It is our right to do all these things: who is this Muhammad who can say 'Don't do them'?" was the question of the people of Abu Jahl. So, the Prophet, escaping from the harassment of Abu Jahl, came to the city of Medina and presented his principles to the people. Not only the people living in the city of Medina, but also the surrounding villagers accepted the Prophet's principles and followed them. Seeing that the crowds were gathering in the path of the Prophet day by day, the Prophet brought news to them that a jealous group, led by Abu Jahl, was coming to attack the city of Medina. They sent spies to spy on them. It was clear that the army was coming to Abu Jahi. When the Prophet learned that the army was coming with a thousand trained soldiers, seven hundred camels, and a hundred horses, armed with weapons, he gathered his companions and held a consultation.

**Keywords:** Seera Puranam, God, Medina, Muhammad

## முன்னுரை

இஸ்லாம் என்பது, இறைவன் ஒருவனே என்பதும், இறைவனுக்கு உருவம் இல்லை என்பதும், இறைவனை நம்பவேண்டும் என்பதும், இறைவன் படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமம் என்பதும், பணத்தாலோ, நிறத்தாலோ, மொழியாலோ, மனிதரில் ஏற்றத்தாழ்வு கூறுவது தீது என்பதுமாம். இவற்றோடு, மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவது, குடிப்பது, சூதாடுவது, விபச்சாரம் புரிவது, பொய் புகல்வது, களவாடுவது, கொள்ளை இலாபம் வைப்பது, பண்டங்களைப் பதுக்கிவிடுவது, நிறுவையிலோ அளவையிலோ மோசடி செய்வது, வட்டி வாங்குவது ஆகியவற்றையெல்லாம் விடுத்து மனிதர்கள் நேர்மையாக நடக்கவேண்டும் என்பதுமேயாம்.

"இவற்றையெல்லாம் செய்வது எங்கள் உரிமை: 'செய்யாதே' என்று சொல்ல இந்த முகம்மது யார்?" என்பதே அபூஜஹில் கூட்டத்தாரின் கேள்வி. எனவே, அபூஜஹிலின் தொல்லையிலிருந்து விலகி, மதீனமா நகருக்கு வந்து, தங்களின் கொள்கைகளை மக்கள் முன்பு வைத்தார்கள் நபிகள் நாயகம் அவர்கள்.

மதீனமாநகரில் வாழ்ந்த மக்களேயன்றி, சுற்றுப்புறக் கிராமவாசிகளும் நபிகள் நாயகம் அவர்களின் கொள்கைகளை ஏற்று ஒழுகலாயினர். நாளுக்கு நாள் நாயகத் திருமேனி அவர்களின் வழியில் மக்கள் கூட்டம் சேர்ந்துகொண்டேபோவது கண்டு, பொறாமையுற்ற கூட்டம், அபூஜஹில் தலைமையில் படைகொண்டு மதீனா மாநகரைத் தாக்க வந்து கொண்டிருக்கின்றது என்ற செய்தி, நபிகள் நாயகம் அவர்கட்கு எட்டிற்று. ஒற்றர்களை அனுப்பி வேவு பார்த்துவரச் செய்தார்கள்.

படைகொண்டு அபூஜஹில் வருவது உண்மை என்றே தெரிந்தது. பயிற்சிபெற்ற ஆயிரம் வீரர்களுடன், எழுநூறு ஒட்டகங்கள், நூறு குதிரைகளுடன் படைக்கலன்கள் ஏந்தியவாறு அக்கூட்டம் வருகின்றது என்பதை அறிந்தபோது, தமது சகாக்களைக் கூட்டிவைத்து நபிகள் நாயகம் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

## நபிகளின் உபதேசம்

மதீனாமா நகரினை அபூஜஹிலின் படையினர் நெருங்கும் முன்னர், எதிர்த்துச் சென்று வழியிலே அவர்களைத் தடுத்து நிறுத்திப் போரிடவேண்டும் என்று நபித் தோழர்கள் ஆலோசனை கூறினார்கள். அதன்படி செய்வதென முடிவாயிற்று. படைக்கு ஆள் திரட்டப்பட்டது. மொத்தம் சேர்த்தவர்களை எண்ணிப் பார்த்தபோது, 314 பேர்களே இருந்தனர். இதில் ஒருவர் போரிட இயலா நிலையில் உள்ளவர்; அவரை நீக்கி எண்ணிப் பார்த்தபோது, முந்நூற்றுப் பதின்மூன்று பேர்கள் மட்டுமே இருந்தனர்.

ஒட்டகம் நூறு இருந்தன. குதிரைகள் இரண்டிற்கு மேல் இல்லை. ஆயுதங்களும் அதிகமில்லை. இந்த முந்நூற்றுப் பதின்மூன்று பேர்களிலும், போர்ப்பயிற்சி பெற்றவர்கள், உமறிப்னுகத்தாப், ஹம்சாரலி போன்ற ஓரிருவரே இருந்தனர். ஆனால், இவர்களிடையே அன்பு இருந்தது; அறம் இருந்தது; இரக்கம் இருந்தது; ஈகை இருந்தது; தானம் இருந்தது; தவம் இருந்தது.

எதிரிகள் ஆயிரம் பேரானால் என்ன? அதற்கும் மேலானால்தான் என்ன? எதிர்த்து வெல்வது, அல்லது வீர சொர்க்கம் புகுவது என்ற ஊனமில் ஊக்கம் இருந்தது. இவற்றிற்கு மேலாக, இறை நம்பிக்கை இருந்தது; தனக்கென வாழாத் தியாக மனப்பான்மை இருந்தது. எனவே, இச்சிறு கூட்டத்தினர் அச்சமின்றிப் புறப்பட்டார்கள். மதீனத்திலிருந்து மூன்று அல்லது நான்கு நாள் பயணத்திற்கு அப்பால் உள்ள பத்று என்னும் இடத்தில் சென்று, அபூஜஹில் கூட்டத்தைச் சந்தித்தார்கள். முன்னரே அங்கு வந்துவிட்ட அபூஜஹில் கூட்டம் வசதியான இடத்தில் முகாமிட்டிருந்தது.

நாயகத் திருமேனி அவர்களைச் சேர்ந்தோருக்கு வசதிக் குறைவான இடமே கிட்டிற்று. முந்நூற்றுப் பதின்மூன்று பேரைக்கண்ட அபூஜஹில் கூட்டம், எள்ளி நகைத்தது. 'போதிய படைக்கலன்களும் ஏறுவாகனமும் அற்ற இச்சிறு கூட்டமா நம்மை வெல்லும்?" எனக் கூறிச் சிரித்து மகிழ்ந்தது. பெருமானார் அவர்கள் தமது தோழர்கட்கு உபதேசித்தார்கள்: "நாம் நமது கடமையைச் செய்கிறோம். வெற்றி தோல்வி ஆண்டவன் புறத்தில் உள்ளது. ஆனால், நீங்கள் வலியச் சென்று தாக்கவேண்டாம். அவர்கள் உங்களைத் தாக்கிய பின்னரே நீங்கள் தாக்கவேண்டும். போரிடும்போது, வீர வசனங்களோ, வீண் உரைகளோ, சவால் விடுவது போன்ற பேச்சுக்களோ பேசவேண்டாம். எக்காரணத்தாலும் நின்றநிலை பெயரவேண்டாம்.

யாரை நாம் ஏற்று வணங்குகின்றோமோ அந்த இறைவன் நமக்கு வெற்றி தருவான். ஊக்கம் தளரவேண்டாம்!" என உபதேசித்துத்தம் தோழர்களை அன்றிரவு, உறக்கத்திற்கனுப்பிவிட்டு, நாயகத் திருமேனி அவர்கள் இரவு முற்றும் விழித்திருந்து பிராத்தனை புரிந்தார்கள். "இறைவனே! என்னுடன் உள்ள இச்சிறு கூட்டம் அழிந்து பட்டால் உருவமற்ற உன்னை வணங்குவோர் அப்புறம் எவருமில்லை. எனவே, இச்சிறு கூட்டத்திற்கு வெற்றியை நல்கு!" என்பதே நபிகள் நாயகம் அவர்கள்தம் பிரார்த்தனையாக இருந்தது. அவர்களின் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டான். மறுநாட் காலை போர் ஆரம்பமாயிற்று. ஆயிரம் பேர்கட்கும், முந்நூற்றுப் பதின் மூன்று பேர்கட்கும் இடையே போர்! ஆயுதம் உடையோருக்கும், ஆயுதம் அற்றோருக்கும் இடையே போர்! பயிற்சி பெற்ற பல போர்முனை கண்டோருக்கும், பயிற்சியற்ற கூட்டத்திற்கும் இடையே போர்!

அணிவகுத்து நிற்கின்ற தமது படைவீரர்களைக் காண்பதற்கென, அங்கபடியில் கால் ஊன்றிக் குதிரையின்மீது ஏறினார்கள் நாயகத் திருமேனி அவர்கள். அவர்களைச் சுமந்து நின்ற குதிரையை நம் கண்முன் கொண்டு வருகின்றார் உமறுப்புலவர்.

தாவிடில் மனத்தையொக்கும்; தாக்கிடில் இடியேறொக்கும்

ஏவிடில் திகிரியொக்கும் எதிர்ந்தவர்க்குளரியை யொக்கும்.

பூவிடத்து அடலில்வங்கூழ் போன்றிடும் சஃபென்று ஓதும்

மாவினைக் கொணர்மின்என்ன முகம்மதுசரணம் வைத்தார் (பதுறுப் படலம் - 21)

துள்ளித்தாவி ஓடுவதில் மனவேகத்தை உடையது; எதிரிகளின்மீது சென்று தாக்குவதில் இடியினை நிகர்த்தது; ஏவி விடுங்கால் சக்ராயுதத்திற்கொப்பாகச் செயல்படக் கூடியது, ஊழிக்காற்றினும் வேகமாகத் தாக்கக்கூடியது. இத்தகு திறமுடைய குதிரையின் அங்கபடியில் தமது பாதம் வைத்து நபிகள் நாயகம் அவர்கள் ஏறினார்கள். அக்குதிரையின் பெயர் 'சஃப்' என்பதாம். மேலே உள்ள

பாடல்தரும் பொருள் இது. கம்பர், இராமன் கையிலுள்ள அம்பு, சொல்லினும் கடிய வேகமுடையதென்பார்.

சொல் மனத்தில் தோன்றி வெளியில் வரவேண்டும். கம்பனின் பின்தோன்றலாகிய உமறுப்புலவர், அதனினும் சிறப்புறச் சொல்ல எண்ணுவது இயல்பு. எனவே, சொல் உதிப்பதற்குக் காரணமாகிய மனத்தையே குதிரையின் வேகத்திற்கு உவமமாக்கியுள்ளார். இது உமறுப்புலவர் காலத்திலுள்ள புலவர்களின் புலமை வளர்ச்சியைக் காட்டுவதாகக் கொண்டு மகிழ இடமுண்டு. குதிரையின் திறம் கூறும் இப்பாடல் தமிழிற்கோர் நல்ல அணி.

## போர் பற்றிய செய்திகள்

போர் ஆரம்பமாகின்றது. அபூஜஹில் கூட்டத்தினர் தாம் முதலில் போர்க்களத்தில் இறங்கிப் போர்புரிய வருமாறு அழைப்புவிட்டனர். முதலில் தனி நபர்களைக் கொண்டு துவந்த யுத்தம் நடத்தி, பின்னர் போரினை நடத்துவது அரபியர்களின் அக்காலப் போர்முறை. இம் முறைப்படி, அபூஜஹில் அணியினின்றும் ஆமிர் ஹல்ரமி என்பான் போர்க்களத்தில் குதித்து, தன்னுடன் போர்புரிய ஒருவரை அனுப்புமாறு அறைகூவி அழைத்தான். நாயகத் திருமேனி அவர்கள்தம் அணியிலிருந்து மஹஜஆ என்பார் அனுப்பப்பட்டார். ஆமிர் ஹல்ரமியால், மஹஜஆ ஷஹீதானார். அதாவது, வீரமரணம் எய்தினார். இதன்பின் போர் துவங்கிற்று. இருதரப்புப் படைகளும் போரிட்ட திறம்பாடுகின்றார் உமறுப்புலவர். சான்றிற்காக ஓரிரு பாடல்:

வேலில்தாக்கினர் வில்லினில் தாக்கினர், விரிமுக்
கோலில் தாக்கினர் வாளினில் தாக்கினர் குடங்கைத்
தோலில்தாக்கினர் சுரிகையில் தாக்கினர் துரத்திக்
காலில்தாக்கினர் தாக்குறும் பேரமர்க் களத்தில், (பதுறுப் படலம் - 138)

கேடகத்தையும், தாங்கிய கரத்தையும், கிடந்த
சோடிணைப்படும் இரும்பையும், உரத்தையும், துளைத்துன்
ஊடுறப்புகுந்து, இருந்தவல் உயிரையும் உருவிச்
சாடி,அப்புறம் போயின வீரர்கைச் சரங்கள். (பதுறுப் படலம் - 142)

இவ்விரு பாடல்களும் போரில் நடந்த தாக்குதல்களையும் அவற்றால் நேர்ந்த விளைவுகளையும் உரைக்கின்றன. குறைந்த எண்ணிக்கையுடையோர்க்கிடையே நடந்த சண்டையாதலின் காலையில் துவக்கிய போர் மாலைக்குள் முடித்துவிட்டது. அபூஜஹில் முதல், வலீது, உத்பா, உமையா, ஷைபா போன்ற முக்கியமான தலைவர்கள் உள்ளிட்ட எழுபதுபேர் இறந்து பட்டனர். எழுபதுபேர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர். எஞ்சியோர் போர்க்களம் விட்டோடி விட்டனர். நாயகத் திருமேனியார் அணியில் இழப்பு, பதினான்கு பேர்களே! 'போர் முடிந்த களத்தைக் காட்சிப்படுத்துகின்றார் உமறுப் புலவர்:

முரசமும் அவிந்த, காகளம் அவிந்த,
    மூரிவெம் பேரியும் அவிந்த
பரிகளும் அவிந்த, ஆவணத்தொகுதிப்
    பாசறை முழக்கமும் அவிந்த
திரைகடல் எனும்பே ரோதையும் அவிந்த,
    வீரர்கள் சேவகம் அவிந்த,
அரசரும்அவிந்த, வாகையும் திறனும்
    ஆண்மையும் அவிந்தன அன்றே. (பதுறுப் படலம் - 208)

நிரைநிரைப் பரியின் பிணக்குவைமலிந்த,
    நிருபர்கள் உடல்குறை மலிந்த,
விரிகதிர்ப் பூணும் ஆரமும்மலிந்த,
    வெற்றியெம் படைக்கலம் மலிந்த,
குருதியும்மலிந்த, குடல்துடர் மலிந்த,

கொற்றவர் மணிமுடி மலிந்த,
முரிதரும் சிரசின் முளைகள்மலிந்த,
மொய்த்தவெண் நிணங்களும் மலிந்த (பதுறப் படலம் - 207)

வீரர்கள் மலிந்த போர்க்களத்தில், போர் நிகழ்ந்து முடித்த பின்னர், அப்போர்க்களம் கண்ட அமைதியையும், அங்கே மலிந்து கிடந்த பிணக் குவியல்களையும், அணிமணி ஆயுதங்களையும் இவ்வாறாகப் பாடி விளக்குகின்றார் உமறுப்புலவர்.

நடந்த போர்தான் இப்போர். இது நடந்திருக்க வேண்டாம் என்பதே நபிகள் நாயகம் அவர்கள்தம் விருப்பம், ஆனால் தடந்து விட்டது. மூன்று நாட்கள் அவ்விடத்தே தங்கி, போரில் மாண்டோரின் உடலங்களைப் புதைத்துவிட்டு, பிடிபட்ட எழுபது பிணைக் கைதிகளுடன் மதீனாமாநகர் நோக்கிப் புறப்பட்டுச் சென்று சேர்ந்தார்கள். தமது தோழர்கள் புடைசூழ நபிகள் நாயகம் அவர்கள்.

## பத்ருப் போர்

படை பலத்திற்கு வள்ளுவர் காட்டும் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்தது பத்ருப்போர்! ஒரு பகற்போதிற்குள் நடந்து முடிந்த போர் தான் இது. ஆனால் இதன் விளைவு, உலகத்தில் ஒரு மாற்றத்தை, புதுநெறியை, பூரணத்துவமுடைய இறை நெறிப்பட்ட வாழ்க்கையைப் பரந்த இப்பார் முழுவதற்கும் ஆக்கவழியில் அறிமுகப்படுத்துவதாயிற்றெனலாம்.

பத்ருப்போர் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்புமுனை. இந்தப் போரில் நாயகம் (சல்) அவர்கள் கடைப்பிடித்த நெறி போர் வரலாற்றில் ஏன், ஞானியர் மகான்கள் வரலாற்றிலும் கூட ஒரு புருவ நெறிப்பைத் துலக்கிக் காட்டுவதாகும்.

இந்தப் போரினிடையே நாயகம் (சல்) அவர்கள் ஆண்டவனிடத்திலே இருகர மேந்திக் கேட்கின்றார்கள்.

“எல்லாம் வல்ல இறைவனே, ஏகனே, உருவமற்ற ஒளி முதலே! இச்சிறுபடை தோல்வியுறுமானால், இறைவன் ஒருவனே என்றும் அவன் உருவமற்றவன் என்றும் கொண்டு உன்னை வணங்கி வழிபடும் கூட்டம் இல்லாதாகி விடுமே! இறைவனே இச்சிறு படைக்கு வெற்றியைத்தா என்பது அவர்கள் இறைவனிடம் இரந்து வேண்டிய கோரிக்கையாகும்.”

வெற்றி கிட்டியது. அதனைத் தன் வெற்றி என்றிடவில்லை நபிகள் நாயகம் (சல்) அவர்கள். இறைவன் அளித்த வெற்றி, இறைவனுக்கான வெற்றி என்றார்கள், அடக்கத்துடன்! இறைவனும் இவ்வாறாகவே தனது திருமறையாம் திருக்குர்ஆனில் புகன்றுள்ளான். இந்த ஒருநாள் போரைப் பல நாட் போர் போன்று விரித்துரைக்கின்றார் உமறுப்புலவர்.

இஸ்லாமிய நெறி பிறழாமலும், தமிழ்க் காப்பிய மரபிற்குக் குந்தகமின்றியும் வீரச்சுவை மிளிர இலக்கியச் சுடர் ஒளிரத் தமக்கே உரிய பாணியில் அவர் பாடிச் செல்லும் பாங்கு இஸ்லாமியர்களின் இதயத்தை மட்டுமல்ல, இலக்கிய நுகர்வாளர்கள் அனைவர் உள்ளத்தையும் கவரவல்ல படலம் பத்ருப் போர்ப் படலம்!

பத்ருப் போரில் பிடிபட்ட எழுபது பேர்களில் இருவரைத் தவிர்த்து மற்றோர் அனைவரும் மதீனமா நகருக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களை என்ன செய்யலாம் எனத் தம்தோழர்களிடம் கேட்டார்கள் நபிகள் நாயகம் அவர்கள். அனைவரையும் கொன்றுவிடவேண்டும் என்றார் உமறிப்னுகத்தாப். நாயகத் திருமேனி அவர்கள் அக்கருத்தை ஏற்கவில்லை. பிணைக் கைதிகளாக நடத்தவே விரும்பினார்கள்.

தலைக்கு நாலாயிரம் திர்ஹம் (ஆயிரம் ரூபாய்) நட்டஈடு தந்து, விடுதலை பெற்றுச் செல்லலாம் எனப் பணித்தார்கள். நட்டஈடு தரவசதியில்லா ஏழைகளை விடுதலை செய்தனுப்பினார்கள். கல்வி அறிவுள்ள ஒவ்வொருவரும் கல்வி அறிவில்லாத மதீன மாநகரத்திலுள்ள பிள்ளைகட்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்து விடுதலை பெற்றுச் செல்லலாம் என்றார்கள். இவர்களை நன்கு உணவளித்துப் பாதுகாக்குமாறு தம் தோழர்களிடம் ஒப்புவித்தார்கள். நபித் தோழர்கள் தம்மைக் கொல்லவந்த அவ்வெதிரிகளைத் தமது நண்பர்களாக ஏற்று, இல்லத்திற்கிட்டேகி உணவு, உடை உறையுள் வழங்கி அன்புடன் நடத்தினார்கள்.

தம் பகைவர்களை இவ்வளவு மேன்மையாக நடத்திய வரலாற்றினை நபிகள் நாயகம் அவர்கள்தம் வரலாற்றிலின்றிக் கற்பனைக் கதைகளில்கூடக் காண்பது அரிதேயாகும். மேலும், கைதிகளைக் கல்விப் போதர்களாக அமைத்ததும்கூட வேறு சரித்திரங்களில் காண்பது அரிதேயாம். நபிகள் நாயகம் அவர்களும் அவர்கள் தம் தோழர்களும் தங்களை நடத்திய விதம்பற்றி, அக்கைதிகள் மக்கமாநகரிற்குத் திரும்பிய பின்னர் அங்குள்ளோரிடம் வியந்து கூறினார்கள். எனினும், நபிகள் நாயகம்

அவர்களைப் பகைக்கின்ற, எதிர்த்து அழித்தே தீருவதென்கின்ற எண்ணம் மக்கமா நகர வாசிகளின் மனத்திலிருந்து அகலவேயில்லை.

இந்தப் போர் முடிந்த அடுத்த ஆண்டு முடியும் முன்னர் மறுபடியும் அவர்கள் படைகொண்டு போருக்கெழுந்தனர். இடையில் சில சில்லறைப் போர்களை நடத்தினார்கள் என்றாலும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களையெல்லாம் தூண்டிவிட்டுப் போரிடச் செய்தனர் என்றாலும், அவை எல்லாம் சில்லறைப்போர்களே!

## உகதுப் போர்

முதலில் நடந்த பத்றுப்போருக்குப் பின்னர் எழுந்த பெரும் போர் இதுவேயாம். உகதுப் போர் என்பது இப்போரின் பெயராகும். உகதெனும் மலை அடிவாரத்தில் போர்நடந்ததால் இப்பெயர் வந்தது. உகதுமலை மதீன மாநகருக்கு அண்மையில் உள்ளது.

இப்போருக்கு மூவாயிரம் மக்கா நகரவாசிகள் தக்க போர்க் கருவிகளுடனும், குதிரைகள் ஒட்டகங்கள் போன்ற ஏறு வாகனங்களுடனும், போர்ப்பரணிபாடி வீரம் ஊட்டு வதற்கு எனப் பெண்கள் பலருடனும் வந்திருந்தனர். நபிகள் நாயகம் அவர்கள் அணியில் எழுநூறு பேர்களே இருந்தனர். இந்த எழுநூறு பேர்களும் போர்க்களம் நோக்கிச் செல்கின்றனர். குதிரைகளின்மீது இவர்களில் சிலர் சென்றனர். உமறுப்புலவர் பாடுகின்றார்.

பரவைமாநிலம் சுமந்த வெம்பரிகளை, பரிகள்

விரைவின் வேகத்தில்சுமந்தன வேந்தரை, வேந்தர்

மருமலர்ப்புவம் சுமந்தன வாட்களை, வாட்கள்

பெருகும் ஊன்நிணம் சுமந்தன பிறங்கொளி பிறங்க (உகுதுப் படலம் - 41)

நிலம் குதிரைகளைச் சுமக்க, குதிரைகள் வீரர்களைச் சுமக்க, வீரர்கள் வாட்களைச் சுமக்க, வாட்கள் நிணங்களைச் சுமப்பதற்கென விரைந்து சென்று போர்க்களம் உற்றனராம். உமறுவின்பாடல் தருகின்ற காட்சி நயமுடையது. போர் மூண்டது. போர் முனையிலும் தமது பண்புமுறை தவறாத நெறியினரான நாயகத் திருமேனி அவர்கள், முந்திய போரில் சொன்னது போன்றே இப்போரிலும், "எதிரிகள் வந்துதாக்கினால் ஒழிய நீங்கள் தாக்கக் கூடாது. போர் என்பது தற்காப்பிற்காகவே ஏற்கப்பட வேண்டிய தவிர்க்கமுடியாத ஒன்றாம்' என்று கூறுகின்றார்கள்.

நாயகப் பேரொளியவர்களின் அவ்வுரையை உமறுப்புலவரின் பாடலாகக் காணமுடிகிறது.

திருக்குஉறும் கருத்துடைஅயலர் சினத்தொடும் கெழுமி

இருக்கும் நம்மிடத்துவருவார் எனில், எதிர்ந்து

முருக்கிநம்புகழ் நிறுத்துதல் கடன்என மொழிந்தார்

மருக்கொழுந்தொடை துயல்புய பூதரவள்ளல். (உகுதுப் படலம் - 59)

நாயகத்திருமேனி அவர்கள்தம் வாக்கினை வேதவாக்கின் விளக்கம் என ஏற்றொழுகும் நபித்தோழர்கள், தமக்கு இடப்பட்ட கட்டளைப்படியே ஒழுகினர். ஆனால், இரு நூற்றைம்பது கல் தொலைவினைக் கடந்து வலிந்து போரிடவந்து குழுமியுள்ள அஞ்ஞான இருள் நிறைந்த கல்மனத்தோரின் பண்பு வேறு விதமாக இருந்ததாம். புலவர் உமறு பாடுகின்றார்:

அல்லும்கல்லும் ஒத்தனமனக் குபிரவர் படையில்

செல்லும்செல்லும் என்றுஏவின விசிறியின் திரள்கள்

கொல்லும்கொல்லும் என்றுஆர்த்தன பல்லியங் குமுறல்

வெல்லும்வெல்லும் என்றாடின விடுநெடும் கொடிகள். (உகுதுப் படலம் - 96)

நீண்ட நல்ல விளக்கம் செய்ய வேண்டிய இப்பாடலை, ஓசை நயம் கருதியும், ஒழுங்கற்றோர் மனப்பாங்கு தெரியவும் பலமுறை பாடி, மனத்துள் பதியவைத்துக் கொள்ளலாம். மரபு ஒழிந்த மக்கமாநகர மறமாக்களின் நிலை இது என்றால், வேதம் மறுவும் நாவுடைய நபிகள் நாயகம் அவர்கள்தம்படையினர் எப்படி?

மாற்றலர் திறமும்கூறும் வாய்மையும் ஒடுங்க, வெற்றி

ஊற்றமும் ஒடுங்கத் தேறா உள்ளமும் ஒடுங்க, வந்த

தோற்றமும் ஒடுங்க,நின்ற தொன்நெறி ஒடுங்க, மாறாச்

சீற்றமும் ஒடுங்க, வேத தீனவர் ஆர்த்துநின்றார். (உகுதுப் படலம் - 91)

பாடல்களின் ஓசை ஒலிப்பின் வாயிலாகவே பரபரப்பாளரின் பாங்கினையும், பண்புடையார் நெறியினையும் விளக்கி விடுகின்றார் உமறுப்புலவர். எனவே, இப்பாடல்கட்குச் சொல்விளக்கம் தேவையில்லை எனலாம்.

தம்மை எதிர்த்தோரை எதிர்த்து நபிகள் நாயகம் அவர்கள் நடத்திய போர்களிலே இந்தப் போர் கடுமையான போர் எனலாம். ஒரு கட்டத்திலே நபிகள் நாயகம் அவர்கள் இறந்து பட்டார்கள் என்னும் வதந்தியை எதிர் முகாமிலுள்ள கொடியோன் ஒருவன் பரப்பி விடுகின்றான். எதிரிகள் அணியில் மகிழ்ச்சி ஆரவாரம். நாயகத் தோழர்களிடையே சோர்வு. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஹம்சா ரலி அவர்களை ஒருவன் மறைந்து நின்று வேல்வீசிக் கொன்று விடுகின்றான்.

நபிகள் நாயகம் அவர்களின் சிறிய தந்தையார் ஹம்சா ரலி அவர்கள், ஆற்றல் மிக்க போர்த்தளபதி யாவார் கள். எதிரிமுகாம் தலைவனின் மனைவியான இந்தா என்னும் மாது இறந்துபட்ட ஹம்சா ரலி அவர்களின் உடலை உருத்தெரியாதபடி சின்னாபின்னப்படுத்தி விடுகின்றாள்.

குடலைப்பிடுங்கிக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டு கலிங்கத்துப் பரணியில் வருகின்ற பேய்க்கொப்பாக ஆடிக் களிக்கின்றாள். நபிகள் நாயகம் அவர்களின் முன்பற்களில் இரண்டு இப்போரில் உடைபட்டுப் போகின்றன. 'முகத்தில் குருதிகொப்பளித்தோடும் படியான காயம் ஏற்பட்டுவிடுகின்றது. மயக்கமுற்றநிலை சிறிது நேரம் நீடிக்கின்றது. பிறகு மயக்கம் தெளிந்து போர்க் காரியங்களில் ஈடுபடத் தமது தோழர்களை ஏவுகின்றார்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் இறந்து பட்டார்கள் என்ற தவறான செய்தி மதீன மாநகரில் பரவவே, அங்குள்ள பெண்களெல்லாம் நாயகம் அவர்களைக் காண்பதற்கென உகதுமலை அடிவாரத்தை நோக்கி ஓடிவருகின்றார்கள். அதிலே ஒரு பெண், தன் முன்னம் எதிர்ப்பட்ட ஒரு வீரரிடம் நபிகள் நாயகம் அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்று வினவுகின்றாள். 'போரில் உன் கணவன் இறந்து விட்டார்' என்கிறார் அந்த வீரர். 'அதிருக்கட்டும்; நபிகள் நாயகம் அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்' எனக் கேட்கின்றாள் அப்பெண்மணி.

"உன் மகன் போரில் இறந்து விட்டான்" என்கின்றார் அவர். இப்பொழுதும் அவள் நபிகள் நாயகம் அவர்களைப் பற்றியே கேட்கின்றாள். உன் தந்தை இறந்து விட்டார், உன் சகோதரர் இறந்துவிட்டார்' என்று அவ்வீரன் கூறியதை எல்லாம் அம்மாதரசி காதில் ஏற்றுக்கொள்ளவில்லை. முடிவில் அவ்வீரர், "நபிகள் நாயகம் அவர்கள் நன்றாக உள்ளார்கள்" என்று உரைத்ததும், "ஆண்டவன் என்னைக் காப்பாற்றிவிட்டான்; புகழ்அனைத்தும் அந்த ஆண்டவனுக்கே" எனக்கூறி, நாயகத் திருமேனி அவர்களைக் காண்பதற்கு ஓடினாள் அந்த நங்கை நல்லாள்.

உகதுப் போரில், நாயகம் அவர்களின் அணியில் பெரும் சேதம். ஆனால் எதிரிமுகாமில் உள்ளோருக்கு இதனினும் அதிக இழப்பு. முடிவில், போர்முனையைவிட்டே ஓடினார்கள் மக்கா நகரத்தினர். ஓடுகின்ற வேகத்தில் போர்க்கருவிகள் போன்றவற்றை எல்லாம்கூடக் களத்திலே விட்டுவிட்டு ஓடினார்கள். இறந்து பட்டவர்களை எடுத்து நல்லடக்கம் செய்துவிட்டு, மதீனமா நகரில் சென்று சேர்ந்தார்கள் நபிகள் நாயகம் அவர் கள். இந்தப்போர், மக்கமாநகரிலிருந்து நபிகள்நாயகம் அவர்கள் மதீனம் சென்று சேர்ந்த மூன்றாவது ஆண்டில் நடந்த தாகும்.

இந்தப் போர் பற்றிப் பிற்காலத்தில் நபிகள் நாயகம் அவர்கள் குறிப்பிடும் போது, பத்றுப் போரில் கிடைத்த வெற்றியை வைத்து, வெற்றி நமக்கே என எம் தோழர்கள் எண்ணிப் பெருமிதம் கொண்டு விட்டார்கள். அந்தப் பெரு மிதத்திற்கு இறைவன் தந்த எச்சரிக்கையே இப்போரில் நாம் பெரும் இழப்பிற்குள்ளானது எனக்கூறி, வெற்றியில் களித்தல் மிகத்தீது என எச்சரித்துள்ளார்கள். இந்த எச்சரிக்கை இன்றும் என்றும் எல்லோருக்குமே பொருந்துவதாகும்.

எழுநூறு எளிய வீரர்களை மூவாயிரம் அடலேறுகளால் வெல்ல இயலவில்லை; ஆனால், மனமும் திருந்தவில்லை. வள்ளல் நபியை எப்படி மாய்த்து அழிப்பது என்பது பற்றியே கவலையுடன் சிந்திக்கின்றார்கள். முன்னம், அபுஜஹில் ஒருவனே சிந்திப்பவனாயிருந்தான். இப்பொழுது, அபுசுபியான், இக்ரிமா, காலித்பின்வலீத் என்ற முப்பெரும் தளபதிகள் சிந்திப்பில் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் அரபு நாடு முற்றிலும் சுற்றிப் படை திரட்டுகின்றார்கள். இதற்குமுன் பத்று, உகது என்ற இரு இடங்களிலும் நடந்த போர் மக்கத்தில் வசிப்பவர்கட்கும் மதீனத்தில் வசிப்பவர்கட்குமான அரபியர்கட்குள் மட்டுமே நடந்தது. இம்முறை நடைபெறவிருக்கின்ற போருக்கு, யூதர்களையும் ஏனையோரையும் முடிந்தவரை திரட்டினார்கள் மக்கா நகரவாசிகள். உமறுவின் பாடல், மக்கா நகரவாசிகள் திரட்டிய படையில் இருந்தோர் யார்யார் எனக் கூறுகின்றது.

சுற்றுளவேந்தர் பல்பெருங் குலத்தில்

தோன்றிய அரசரும் அவரோ(டு)

உற்றவெம்படையும் பனீகுறை லாவென்(று)

ஓதிய மாந்தரும் கபடம்

பற்றிய எஹூதிக் குழுவின ரவரும்

பரிவொடு மக்கமா நகரில்

தெற்றினர் வளைந்தமுகக்குசை பரியும்

செறிந்திடத் திரைக்கடல் சிவண. (உயை வந்த படலம் - 1)

எனும் பாடல் குறிப்பிடுகிறது.

## அகழ்ப் போர்

இப்படி, பலதர மக்களைப் பெரும் அளவில் திரட்டிக்கொண்டு, தம்மை எதிர்க்க மக்கா நகரினர் வருகின்றார்கள் என அறிந்ததும், முன்போலின்றி இம்முறை மதீன மாநகரிலிருந்தபடியே எதிரிகளைச் சந்திப்பது என மாநபியும், நபித்தோழர்களும் முடிவுகட்டினர். எனவே, மூன்று புறங்களிலும் மலைகள் அரணாகத் திகழ்கின்ற மதீன மாநகரின் ஒரு புறத்தில் மட்டும் அகழ் வெட்டிப் பாதுகாப்புச் செய்தார்கள், நாயகத்திருமேனி அவர்கள். அகழி தோண்டுவதில் ஈடுபட்ட மூவாயிரம் பேர்களுடன் சேர்ந்து கற்களை உடைத்தும், பூமியை அகழ்ந்தும் மண் கூடை களைச் சுமந்தும் பணி புரிந்தார்கள். நாயகம் அவர்களும் ஏனையோரும், இரவு பகல் என்று பாராமல், பசியும் பட்டினியுமாகப் பல நாட்கள் முயன்றுழைத்து அகழி தோண்டி முடித்தார்கள். அகழி தோண்டிய மூவாயிரவர்களே நாயகத்திருமேனி அவர்களின் படையணி வீரர்கள் ஆவர். எதிரிகள் வந்து தாக்கும்போது, அகழியின் உட்பக்கக்கரைமீது நின்று, தடுத்து எதிர்த்துப் போர் செய்வதென முடிவாயிற்று. நாயகத்திருமேனி அவர்களும் அவர்கள் தம் தோழர்களும் அகழி அகழ்ந்ததை உமறுவின் ஒரு பாடல் கீழ்க்கண்டவாறு கூறுகின்றது.

மட்டிலாதகல் வெட்டியும், நீண்டகை வாய்ந்த

கொட்டும், ஏந்துகூந்தாலமும் பலப்பல கொணர்ந்து

அவை அடிக்கடி கூடையில் வீழ்த்தித்

தட்டுவார் பலதிடரென முறைமுறை தாங்கி. (கந்தக்குப் படலம் - 47)

இப்பாடல், கற்களை உடைத்தும் பூமியைக் கிண்டியும் தோண்டியும் அகழ்வதற்கும் அகழ்ந்த கற்களையும் மண்ணையும் அப்புறப்படுத்துவதற்கும் பயன்படுத்திய கருவிகளையும் அவற்றைப் பயன்படுத்திய தன்மையையும் பகர்கின்றது. கல்வெட்டி, நீண்ட பிடியுடைய மண்வெட்டி, குந்தாலம், கூடைகள் பயன் படுத்தப்பட்டனவாம். இவற்றில் மண்வெட்டி, குந்தாலம், கூடை ஆகியவை பற்றி அனைவரும் அறிவர். கல்வெட்டி என வரும் கருவியை நம் நாட்டிலும் சரி, இலக்கியங்களிலும் சரி, அறியவில்லை. கற்களைப் பிளக்க உளியைப் பயன்படுத்துவதுண்டு. கல்லுளி என அதனைச் சுட்டுவர். கல்லுளியைக் கல்வெட்டி எனக் குறிக்கின்றார் எனக் கொண்டாலும் இது வழக்கிலும் இலக்கியத்திலும் இல்லாப் புதுச் சொல்லேயாம். "சொல் புதிது, பொருள் புதிது நவகவிதை" என்பான் பாரதி! பாரதியின் கணக்குப்படி உமறுவின் கவிதைகளை நவகவிதை எனலாம்.

விரைந்து மன்னவர் அவரவர் தனித்தனி மேவி

அரிந்துசூழகழ்க் கிடங்கினை அழகுறத் திருத்தி,

சொரிந்தநீள்கரைப் புடவியும் வரையெனத் தோன்ற,

திருந்தவே அமைத்தனர் குபிர்த்திருந்தலர் திகைப்ப. (கந்தக்குப் படலம் -82)

மூவாயிரம் பேர் ஒன்றுகூடி அகழி தோண்டினர். தோண்டிய அகழி அதனுடைய ஆழத்தாலும் நீண்டு கிடப்பதாலும் கிடங்காயிற்று. அக்கிடங்கின் இரு மருங்கினையும் கரடுமுரடு அற்றதாகக் கருவிகொண்டு சுவர் போன்று தெரியுமாறு அழகுறச் செம்மைப் படுத்தினார்கள். இதனை, அரிந்து ஆழகழ்க் கிடங்கினை அழகுறத் திருத்தி என மென்மைதொக்கப் பாடுகின்றார். அகழியின் சுவர்ப் பகுதியை, அரிந்து செம்மைப் படுத்தினர் என்பதிலுள்ள அரிந்து என்னும் சொல் புதிதல்லவெனினும் இடம் கருதி நோக்கின் புதுமை என்றே கொள்ளல் வேண்டும். கிணற்றின் சுவரையோ, அகழியின் இருமருங்கையுமோ செதுக்குவதை, அல்லது செத்துவதை 'அரிந்து' என உமறுவின் இப்பாடலில்தான் காண்கின்றோம். கறி, காய், பழம் போன்றவற்றையே அரி எனச் சுட்டுவர்.

'அரிவாள், மனை அறிவாள்' என்றியம்பல் இதனை மெய்ப்பிக்கும். அகழியின் இரு மருங்கினையும் அரிந்தார் என்றிருப்பது நயத்தகு சொல்லாட்சி. எதிரிகள் கண்டு திகைக்கும் வண்ணம்

மாநபி அவர்களும் அவர்தம் தோழர்களும் தற்காப்பு நிமித்தம் மதீன மாநகரில் காப்பாரற்றிருந்தபகுதி முழுமையிலுமாக அகலமும் ஆழமும் உடைய கிடங்கு அகழ்ந்து, அகழ்ந்தெடுத்த மண்ணினைக் கொண்டு நீண்டமலை எனத் தோன்றுமாறு கரையமைத்து எதிரிகள்வரின், சந்திக்க வாள்கட்கும், வேல் அம்புகட்கும் கூரம் போட்டு வைத்துக் காத்திருந்தனர் என்பதைச் சீறாப்புராணத்திலுள்ள கந்தக்குப் படலத்தில் பார்க்கமுடிகிறது.

கந்தக்கு என்பது, 'கந்தக்' என்ற அரபுச்சொல்லின் திரிபாகும். கந்தக் என்ற அரபுச் சொல்லிற்கு அகழ் என்பது பொருள். இப்படலத்தில் எண்பத்து மூன்று பாடல்கள் உள. நபிகள் நாயகம் அவர்கள்தம் வரலாற்றுத் தமிழ் நூல்களில் அகழ்ப் போர் என்ற தலைப்பின் கீழ் உள்ளவற்றை, 'கந்தக்குப் படலம்' என்றும் 'உயைவந்த படலம்' என்றும் இருபகுப்பாக்கிப் பாடி மகிழ்விக்கின்றார் உமறுப் புலவர்.

மக்கமா நகரிலிருந்து புறப்பட்ட படையணியில், ஐயாயிரம் குதிரைகள் இருந்தனவென்று வரலாற்றாசிரியர் கணித்துரைத்துள்ளனர். ஒட்டகப் படை வேறு. அம்பெய்பவர், வேல்வீச்சினர், வாட் படையினர், கவண்கல் படையினரென்று ஐயாயிரத்தவரும் குதிரைப் படையினர் ஐயாயிரத்தவருமாக மொத்தம் பத்தாயிரம் பேர் புறப்பட்டு வந்தனர். இவர்கள் முழுமைக்கும் அபூசுபியான் தலைமை. மக்கத்துப் படையினருக்குக் காலிதிப்னுவலீதும், இக்ரிமாவும் தளகர்த்தர்கள். மற்ற படைகட்கு, அவ்வக்குழுவிலிருந்தே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். இப்படி வந்தவர்களில் கத்துபான் கூட்டம் என்றொரு அணி. இந்த அணியினர், போரையே தொழிலாகக் கொண்ட வஞ்சினத்தவர் ஆவர்.

கண் மண் தெரியாமல் தாக்குவதென்பார்களே, அத்தகைய தாக்குதலினர். இவர்களின் தலைவனாக உயையினா இப்னுஹசன் அமைகின்றான். இவனைச் 'சினமுறுமனத்து உயையினா' என்பர் உமறுப்புலவர். அகழ்ப் போர் நடந்தவிதம் கூறும் படலத்திற்கு இவன் பெயரால், உயை வந்த படலம் என உமறுப் புலவர் பெயரிட்டுள்ளார்.

கனல்முகம் தெரியும் கவட்டிலைச் சூலம்
கைவிசைத் தெறிகதிர் வேலும்
குனிதருவாளும் மருங்கினில் விசித்து
கத்துபான் குழுவினர் சூழப்
புனைமயிர்ப்புரவி ஆயிரம் நடப்ப
அசன்பெறும் புதல்வன் கோளரியின்
சினமுறும் மனத்தன் உயையினா என்னும்
செம்மலும் ஏகினன் சிறப்ப (உயை வந்த படலம் - 4)

மக்கமா நகரினரின் அழைப்பின் பேரில் அவர்கட்கு உதவப் படை நடத்தி இணைந்துவந்த கோத்திரம், குழு, கூட்டம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைமையைக் கூறிவருகின்ற உமறுப்புலவர் கத்பான் கூட்டத்திற்குத் தலைமை தாங்குகின்றவன் உயையினா என்று இயம்புவதோடின்றி, படலத்தின் பெயரையே உயை வந்த படலம் எனக் கூறுவதற்குக் காரணம் உண்டு. கத்பான் கூட்டம் என்பது காசு தருவோருக்கெல்லாம் படை நடத்தும் கூலிப் பட்டாளத்தையும் மக்கமா நகரினர் கூலி கொடுத்து அழைத்து வந்துள்ள அவமானத்தை அம்பலப்படுத்துவான் வேண்டியே உயை வந்த படலம் எனப் பெயர் தந்துள்ளார். இல்லை எனில் முழுப்படைகட்கும் பொறுப்பினனாகத் தலைமை ஏற்று நடத்தி வருகின்ற அபூசுபியான் வந்த படலம் என்றோ, குதிரைப் படை நடத்துவதில் நிகரில்லாத் தளபதியான காலிது பின்வலிது படைபலம் என்றோ, வீரன் மகன் வீரனான இக்கிரிமா வந்த படலம் என்றே பெயரிட்டிருக்கலாம்.

மக்கா நகர வாசிகள், தங்களைவிட மேலானவர்கள் இல்லை எனக் கூறிக் கொள்பவர்கள். அதிலும் குறைஷிக் குலத்தினர் தங்களின் வீரத்தாலும் விவேகத்தாலும் எதிலும் எதற்கும் தலைமை தாங்கும் ஆற்றல் தங்கட்கே உண்டு எனக் கொக்கரிப்பவர்கள். அத்தகையோர் கூலிப் பட்டாளங்களையும் குணங்கெட்ட சந்தர்ப்பச் சதிகாரர்களையும் இணைத்துப் பெருங் கூட்டமாகப் போருக்கெழுந்துள்ள விதத்தை அவமதிப்புச் செய்யவே கூலிப்படைத் தலைவனின் பெயரால் உயை வந்த படலம் என அகழிப் போர்ப் படலத்திற்குத் தலைப்பீந்துள்ளார் புலவர் உமறு.

மக்கமா நகரிலிருந்து புறப்பட்ட பதினாயிரவரைக் கொண்ட படையணி மதீனமா நகரினை நோக்கிப் போரினையும் வெற்றியையும் மனத்தில் கொண்டு, மமதை மதமதப்பில் வேக நடை, வீர நடை விரைவு என, தம்மை மறந்த களிப்பில் வந்து கொண்டிருக்கும் திறம் கூறுகின்றார் உமறுப்புலவர்.

பூண்டவெந் தானை அறிந்திலர் கழுத்தில்
போட்டநன் மணிவடம் உணரார்

நீண்டநட்பினரைக் கண்டும்அங் கறியார்

நிகழ்த்திய மாற்றமும் அறியார்

ஈண்டியவேந்தர் யாவர்என் றறியார்

எழுகடல் சேனையும் அறியார்

தூண்டியசீற்றத் தீயொன்றே தாங்கி

ஏகினர் மிடலுடைச் சூரர். (உயை வந்த படலம் - 8)

இப்படி, போர் நினைவொன்றே நினைவாகக் கொண்டு மதீன மாநகர் நோக்கிப் போகின்றது மக்கமாநகர்ப் படை.

வீரம் பேசி, வெற்றிநடை பயின்று, மிகவேகமாக மக்கமா நகரத்தின் மாபெரும் படையணி மதீனமா நகரின் அண்மையில் வந்து பாடி வீடமைத்துத் தங்கிற்று. அவர்களைப் பொறுத்தவரை இரவு ஊர்ந்து சென்றது. உதயசூரியனை மிக ஆவலுடன் பார்த்திருந்தார்கள். பொழுது புலர்ந்ததும் தானைத் தலைவர்கள் எழுந்து புரவிமீதூர்ந்து, போர்க்களத்தைப் பார்க்கச் சென்றனர். மதீனமா நகரினை அவர்கள் அண்மியபோது, ஒரு புதுமையைக் கண்டு வியந்து நின்றனர்.

அவர்கள் கண்ணெதிரில் ஆழ்ந்து அகன்ற மிக நீண்ட அகழி தென்பட்டது. இவர்கள் நின்ற அகழிக்கரைக்கு எதிர்க்கரை மிக உயர்ந்த மண்மேடாக, எளிதில் கடக்கவியலாத அளவிற்கு உயரமானதாக இருந்தது. அதற்கு அப்பால் தமது தோழர்களுடன் நபிகள் நாயகம் அவர்கள் காட்சி தந்தார்கள்.

மக்கமா நகரப்படை தாக்கினால் அகழ்க்கரையின் பின்னால் மதீனப் படையினர் மறைந்து கொள்ள வியலும். மதீனப்படை தாக்கினால், மக்கமா நகரப் படையினருக்குத் தங்களைத் தற்காத்துக் கொள்ள மறைவான தகுந்த இடமில்லை. மேலும், மதீனா வாசிகளைத் தாக்குவதாயின் நேரில் சென்று தாக்குவதாயின், அகழியிலிறங்க வேண்டும். மதீனப் படையினர் மேட்டின்மீது நின்று வில்லினாலும் வேலினாலும் தாக்கினால் இவர்கள் அகழியிலேயே மாண்டுமடிவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த விசித்திர அகழ் அரண் அமைப்பு, அரபி நாட்டினர் அறிந்திராத தற்காப்பு முறையாகும்.

பாரசீக தேயத்தவராகிய சல்மான் என்பவர் நபித் தோழர்களில் ஒருவராகி, நாயகத் திருமேனி அவர்களுடன் மதீனமாநகரில் வாழ்ந்திருந்தார். அவர், பாரசீக தேசத்தில் இது போன்ற தற்காப்பு அமைப்பு உண்டு எனக் கூறியதின் பேரில், இவ்வகழ் அமைப்புச் செய்யப்பட்டது. எனவே, அதுவரை கண்டும் கேட்டுமிராத அகழ் அரணைக் கண்டதும், மக்கமாநகரத் தலைவர்கள் செய்வதறியாது திகைப்பில் ஆழ்ந்தனர் என்கின்றார் பாவலர் உமறு.

முன்இலாத கவுத்துவம் முற்றுற

இன்னநாளில் இயற்றினர் ஈங்குஇதால்

பன்னும் மாயமதோஎனப் பாவியர்

உன்னி மீண்டுஓர் இடத்தினில் உற்றனர். (உயை வந்த படலம் - 46)

அகழ் அரணைத் தாண்டிச் சென்று தாக்குவதற்கான மார்க்கம் புலப்படவில்லை. எனவே, இது யார் வகுத்த திட்டமோ அல்லது மாயமோ என மதிமயங்கியவர்களாக மக்க மாநகரினின்றும் மாவீரம் பேசி வந்த தலைவர்கள் ஓர்புறத்தே சென்று அமர்ந்து யோசிக்கத் தலைப்பட்டனர்.

வில்லேர் உழவன் இக்ரிமா, வீரமிக்க குதிரைப் படைத் தளபதி காலித்பின்வலீது, கொலைவெறி படைத்த கத்பான் படையினர், ஊக்கமிகு உயையினா, மொத்தப் படைக்குந் தலைவனான அபூசுபியான் ஆகிய அனைவர்தம் அறிவிற்கும் எட்டவில்லை அகழ் கடந்து சென்று போர்புரியும் மார்க்கம். குதிரைகள் ஒட்டைகள் யாவும் உறங்கின.

எண்ணி வந்த எண்ணம் வேறு; நடக்கின்ற நடப்பு வேறான நிலையில் நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கொண்டு வந்திருந்த உணவுப் பொருள்கள் குறைந்து கொண்டே வந்தன. குதிரை ஒட்டகைக்குத் தீனிகள் இல்லாத் திண்டாட்டமும் வந்தது. இருபது நாட்கள் முற்றுகையின் மொத்த நாட்கள்.

இடையில் நடந்த இரண்டொரு துவந்த யுத்தங்களைத் தவிர்த்துப் புலவர் உமறுக்கும் தமது ஆற்றல் துலங்குமாறு போர்ப் பரணி பாட வாய்ப்பில்லை. எனவே, அவர் போர்க்களத்தே நடந்த யுத்தங்களைப் பாடிக் குறைபோக்குகின்றார். துவந்த யுத்தத்தில் காயமுற்ற சஃது என்பார் இப்படை எடுப்பின் முடிவு 'காணும்வரை தான் இறவாதிருக்க அருள்புரியுமாறு ஆண்டவனிடம் வேண்டிப் பாடுவதாக உமறுப் புலவர் ஆர்த்தளித்துள்ள பாடல்கள் ஆண்டவனைப் பாடுகின்ற, அறிவுத் திறம் படைத்த துதிப்பாடல்களாய்த் திகழக்காண்கின்றோம்.

வானவர்க்கும் நின்னுடைய தூதருக்கும்
மறைதெளிந்த மற்றை யோர்க்கும்
ஊனுடைய பல்லுயிர்க்கும் உணர்வரிய
பேரொளியாய் ஓங்கி நின்ற
ஞானம்எனும் பரம்பொருளே அழியாத
பெரும்பேறே நடுநின் றென்றும்
ஊனமற விளையாடி எவ்விடத்தும்
எந்நாளும் உறையும் கோவே! (உயை வந்த படலம் - 84)

குறைஷியெனும் குலக்காபிர் பகைநாளும்
வளருமெனில் கோதில் லாது
நிறையும்என துடல்உயிரைத் தரவேண்டும்
எத்தலத்தும் நீண்ட ஜோதி
இறையவனே அக்காபிர் நாள்தோறும்
தேய்வார்எனில் இலங்கும் வாளி
உறையும்மலர்க் கரத்துடனே பீசபீல்
மவுத்தாக்க உதவி செய்வாய்! (உயை வந்த படலம் - 88)

ச.்.து பாடியதாக உமறு தரும் ஐந்து பாடல்களில் முதலும் முடிவுமாய் இலங்குகின்ற பாடல்களே இவ்விரு பாடல்களும். இடையில் உள்ள மூன்று பாடல்களும் இதனினும் இனிய கருத்துக் கருவூலங்கள் எனலாம். இது போன்றே போர் நிமித்தம் தொழுகை தவறி விட்டதற்காகவும், போரின் வெற்றிக்காகவும் நாயகப் பேரொளி அவர்கள் இறைவனைத் துதித்து வேண்டிய அரிய உயரிய கருத்துக்களையும் உமறு, செந்தமிழ் பாடல்களாகத் தந்து மகிழ்விக்கின்றார்.

அஞ்சொகுத்தும் தப்பாது கடன்கழிப்பன்
நாள்தோறும் அளித்தேற்கு அந்தோ
வஞ்சமுறும் குபிரவரால் ஓர்வணக்கம்
தாராது வருந்தி நின்றேன்
மிஞ்சுகதி வினைப்பயனோ உலகமெங்கும்
பெருங்காட்சி விரித்த கோவே
தஞ்சமுற உனையடைந்தேன் இத்தகைமை
பொறுத்திரக்கம் தாங்கு வாயே! (உயை வந்த படலம் - 90)

பொல்லாத வஞ்சகரைத் தெளியாத
மனத்தவரைப் புன்மை யோரைக்
கல்லாத கயவரெனும் குபிரவரை
வேகம் அறக் களைந்து நாளும்
எல்லாரும் தொழும் அரிய தீனைவளரத்
துறுவிசயம் எற்கீந் தாள்வாய்
அல்லாவே அல்லாவே என்றிரங்கிப்
புகழ்ந்துபுகழ்ந்து அறைந்தார் மன்னோ (உயை வந்த படலம் - 93)

நாயகப் பேரொளி அவர்கள்தம் வாக்காக உள்ள இவ்விரு பாடல்கட்கு இடையே உள்ள அரிய பாடல்களில் சில, விரிவஞ்சி விடப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் நடந்த இம்முற்றுகைப் போரில் வந்தோர் படையில் இறந்தோர் மூவர். மதீனத் திருந்தோர் தம்மில் இறந்தோர் அறுவர். இதற்கிடையில், வந்தோரிடையே ஒருவரை ஒருவர் நம்பாநிலை தோன்றியது. தோன்றச் செய்தான் இறைவன். இவற்றோடு, பெருஞ் சூறைக்காற்றொன்று "தோன்றித் துன்பம் விளைவித்தது. ஏறு வாகனங்களாகிய ஒட்டகங்கள், புரவிகள் தீனி இன்றித் திண்டாடின. எனவே, வந்தபோது சேர்ந்து வந்த படையினர் தமக்குள் ஒற்றுமை சிதைந்து தனித்தனியே பிரிந்து செல்லலாயினர்.

## முடிவுரை

வீரம் சோர்ந்து வீடு திரும்பிய வீணர்களை அவர்தம் இல்லத்தரசிகள் எப்படி வரவேற்றனரோ தெரியவில்லை. உமறு பாடவில்லை. பாடி இருந்தால் போர்க்களத்தே ஏதோ நடக்கப் போகிறதென்று எதிர்பார்த்துப் படிக்கின்ற வாசகரின் சோர்வுக்கு மருந்தாக அமைந்திருக்கும். பனிமூட்டம் விலகியது போன்று, வந்த பகை மூட்டம் விலகியதிலே மதீனமா நகர மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி. "இனி மக்கமா நகரினர் நம்மீது போர் தொடுக்க மாட்டார்கள்' என நபிகள் நாயகம் அவர்கள் கணித்துரைத்தார்கள். அது அவ்வாறே ஆயிற்று. மக்கமா நகரினர் அதுவரை பெரிதும் சிறிதுமாக நடத்திய போரின் எண்ணிக்கை இருபத்தெட்டெனக் கணித்துள்ளனர் வரலாற்றாசிரியர்கள். அவை மேலும் எண்ணிக்கையை வளர்த்துக் கொள்ள வியலாதவாறு முடிந்தது இந்தப் போர். அதிகமான எண்ணிக்கையினர் வந்து ஏமாந்து திரும்பியதும் இந்த அகழ்ப் போரில் தான். இப்படலத்தை முடிக்கின்ற உமறுப்புலவர், 183 பாடல்களைக் கொண்ட படலம் இந்த உயை வந்த படலம். ஆனால் பத்று, உகதுப் படலங்களைப் போன்று வீரவிளைவுகள் அதிகம் நிகழாத படலமாகி வெற்றி விளம்பி முடிகின்றது.

## References


கா.மு. ஷெரீப் (1992) சீறாப்புராணம், சீதக்காதி நூல் வெளியீட்டகம், சென்னை

இத்ரீஸ் மரைக்காயர் எம். (1989.) -உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம், மரைக்காயர் பதிப்பகம், சென்னை



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License